வறுமை இல்லாத மாநிலமாக கேரளா திகழ்கிறது!

பினராயி விஜயன் பெருமிதம்!!

திருவனந்தபுரம்,நவ.2– வறுமை இல்லாத மாநிலமாக கேரளா மாறியிருப்பதாக முதல்வர் பினராயி விஜயன் அறிவித்துள்ளார்.

கேரளாவில் வறுமை ஒழிப்பு திட்டம் கடந்த 2021–ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது தொடர் பாக மாநிலம் முழுவதும் ஆய்வு நடத்தப்பட்டது. இதில் 64,006 குடும்பங்கள் தீவிர வறுமையில் வாடுவது தெரியவந்தது. இது மாநில மக்கள் தொகையில் 0.2 சதவீதம் ஆகும். அவர்களை வறுமையில் இருந்து மீட்க பல்வேறு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

பல்வேறு குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. நில மற்ற குடும்பங்களுக்கு நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. சுயதொழில் தொடங்க நிதியுதவி வழங்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோருக்கு திறன்சார் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதன் காரணமாக 64,006 குடும்பங்களும் தீவிர வறுமையில் இருந்து மீண்டன.

கேரளா உதயமான தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி நடைபெற்ற சிறப்பு சட்டப்பேரவைக் கூட்டத்தில், தீவிர வறுமை இல்லாத மாநிலமாக கேரளா மாறியிருப்பதாக முதல்வர் பினராயி விஜயன் அறிவித்தார்.

இதை பிரதான எதிர்க் கட்சியான காங்கிரஸ் ஏற்றுக்கொள்ள வில்லை. ஆளும் மார்க்சிஸ்ட் கூட்டணி அரசு மக்களை ஏமாற்றுவதாக எதிர்க் கட்சி தலைவர் சதீசன் குற்றம் சாட்டினார். முதல்வரின் அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ், கூட்டணி கட்சி எம்எல்ஏக்கள் வெளிநடப்பு செய்தனர்.

கேரள தலைநகர் திருவனந்தபுரத்தில் நேற்று மாலை கேரள உதய தின விழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவிலும், தீவிர வறுமை இல்லாத மாநிலமாக கேரளா உருவெடுத்திருப்பதாக முதல்வர் பினராயி அறிவித்தார். அப்போது அவர் பேசும்போது,

"கேரளாவரலாற்றில் புதிய அத்தியாயம் தொடங்கி உள்ளது. தீவிர வறுமை இல்லாத மாநிலமாக மாறியிருப்பதால் ஒவ்வொரு மலையாளியின் தலையும் நிமிர்ந்திருக்கிறது. ஏழை குடும்பங்களின் முன்னேற்றத்துக்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த வறுமை ஒழிப்பு திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்படும் என்று தெரிவித்தார்.

தமிழக முதல்வர் ஸ்டாலின் ஆணையை ஏற்று ,பாபநாசம் அணையில் இருந்து பிசான நெல் சாகுபடிக்காக சபாநாயகர் அப்பாவு தண்ணீரை திறந்து வைத்தார். உடன் கலெக்டர் சுகுமார், முன்னாள்சபாநாயகர்இரா. ஆவுடையப்பன், மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

தமிழகத்தில்

தி.மு.க. ஆட்சி முடிவதற்கான 'கவுன்ட் டவுன்' தொடங்கிவிட்டது!

நயினார் நாகேந்திரன் கருத்து!!

தஞ்சாவூர்,நவ.2– தமிழகத்தில் திமுக ஆட்சி முடிவதற்கான 'கவுன்ட் டவுன்' தொடங்கிவிட்டது என பாஜக மாநிலத்தலைவர்நயினார் நாகேந்திரன் கூறினார்.

ராஜராஜ சோழனின் 1040–வது சதய விழாவை முன்னிட்டு, தஞ்சாவூரில் நேற்று அவரது சிலைக்கு பாஜக சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய நயினார் நாகேந்திரன், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: பெரிய கோயிலுக்கு வெளியே உள்ள ராஜராஜ சோழன் சிலையை கோயிலுக்கு உள்ளே வைப்பது குறித்து தலைவர்களிடம் ஆலோசித்து, அதனடிப்படையில் மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்வோம்.

நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் மூட்டைகள் தேக்கமடைந்துள்ளன. நெல்மணிகள் முளைத்து வீணாகி வருகின்றன. விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஆனால், இதுகுறித்து கவலைப்படாமல் முதல்வரும், துணை முதல்வரும் சினிமா பார்த்துக் கொண்டிருக்கின்றனர். திமுக ஆட்சி முடிய இன்னும் 140 நாட்கள் தான் உள்ளன. இதற்கான கவுன்ட் டவுன் தொடங்கி விட்டது.

வரும் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி கண்டிப்பாக வெற்றிபெறும். இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக, கும்பகோணத்தில் செய்தியாளர்களிடம் நயினார் நாகேந்திரன்கூறியதாவது: கும்பகோணத்தில் ஏராளமான கோயில் கோபுரங்கள் சேதமடைந்து இடிந்து விழும்நிலையில்உள்ளன. அவற்றை சரிசெய்வது குறித்து அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு சிந்திக்க வேண்டும். அதை விட்டுவிட்டு மாற்றுக் கட்சியின் பிரச்சினை குறித்து அவர் பேச வேண்டிய அவசியம் இல்லை. மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறைந்தபட்சம் ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறினார்.

சென்னை கீழ்ப்பாக்கத்தில் கார் மீது லாரி மோதி வாலிபர் பலி! 2 பேர் படுகாயம்!!

சென்னை,நவ.2– சென்னைகீழ்ப்பாக்கத்தில் டேங்கர் லாரி, கார் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில் ,இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். இரண்டு பேர் படுகாயம் அடைந்தனர்.

சென்னை, பட்டாளம், கார்ப்பரேஷன் தெருவை சேர்ந்தவர் விக்னேஷ். இவர் வானகரம் மீன் மார்க்கெட்டில் மீன் வியாபாரம் செய்து வருகிறார். இந்நிலையில், நேற்று அதிகாலை இவரது சகோதரர்களான சீனிவாசன் (33), விஜய் (28) மற்றும் நண்பர் கிஷோர் (28) ஆகியோர் காரில் வானகரம் மீன் மார்க்கெட்டுக்கு சென்று கொண்டிருந்தனர்.

கீழ்ப்பாக்கம் மருத்துவமனைஅருகேபூந்தமல்லி நெடுஞ்சாலையில் கார் வந்து கொண்டிருந்தது. எதிர் திசையில் இருந்து சேத்துப்பட்டு நோக்கி வந்த டேங்கர் லாரி, ஈகா திரையரங்கம் சிக்னலில் சேத்துப்பட்டு செல்லும் சாலையில் திரும்பியது.

அப்போது, காரும், லாரியும் நேருக்கு நேர் மோதிக் கொண்டது. இதில் காரின் முன் பகுதி அப்பளம் போல் நொருங்கியது.

காரில் சென்ற சீனிவாசன், விஜய், கிஷோர் ஆகியோர் படுகாயம் அடைந்தனர். இதையடுத்து, அப்பகுதியில் சென்ற வாகன ஓட்டிகளும், அங்கிருந்த போக்குவரத்து போலீஸாரும், விபத்தில் சிக்கி உயிருக்கு போராடிக் கொண்டிருந்த மூன்று பேரையும் மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு, மூன்று பேருக்கும் சிகிச்சை அளிக்கப் பட்டு வந்தது.

இந்நிலையில், சிகிச்சை பலனின்றி விஜய் உயிரிழந்தார்.

விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்த போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார், டேங்கர் லாரி ஓட்டுநர் தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த சங்கர் (47) என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மெட்ராஸ் ரவுண்ட் டேபிள் 1 சார்பில் சென்னை நேப்பியர் பாலத்தில் இருந்து தொடங்கிய சென்னை ரன்ஸ் 2025ன் பல்வேறு பிரிவு ஓட்டங்களை கொடியசைத்து தொடங்கிவைத்தார். இந்நிகழ்வில் மெட்ராஸ் ரவுண்ட் டேபிள் 1 நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

திருத்தணி அருகே துணிகரம்:

பத்திரப்பதிவு எழுத்தர் வீட்டை உடைத்து 100 பவுன் கொள்ளை!

2 கிலோ வெள்ளி, ரூ.2 லட்சம் ரொக்கத்தையும் மர்ம நபர்கள் அள்ளிச் சென்றனர்; தனிப்படை போலீசார் தேடுதல் வேட்டை!!

திருத்தணி, நவ. 2 திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்கு உட்பட்ட பள்ளிப்பட்டுதாலுகாவை சேர்ந்த கர்லம்பாக்கம் கிராமத்தில் வசித்து வருபவர் பழனி இவரது மனைவி ரஜினி ஆகியோர்கள் இவர்களின் சொந்த வீட்டில் வசித்து வருகின்றனர் பழனி பத்திரப்பதிவு எழுத்தராக வேலை செய்து வருகிறார். பழனி அவரது மனைவி ரஜினி ஆந்திர மாநிலம் திருப்பதியில் உறவினர் திருமணத்திற்கு சென்று உள்ளார் பழனி மனைவி ரஜினி சென்றதால் பழனி தனது மகள் சாய் நந்தினி வீட்டிற்கு ஆந்திர மாநிலம் புத்தூர் அங்கு சென்றுள்ளார்.

இதனால் பழனி வீட்டில் யாரும் இல்லாததை தெரிந்து கொண்ட திருடர்கள் பழனியின் முன் பக்க வீட்டீன் கதவை உடைத்து பீரோவில் இருந்து 100 பவுன் நகை, இரண்டு கிலோ வெள்ளி பொருட்கள், பட்டுப் புடவைகள், இரண்டு லட்ச ரூபாய் பணம் ஆகிய வற்றை கொள்ளையடித்துள்ளனர். மேலும் இவர்கள் வீட்டு மொட்டை மாடியில் உள்ள தனி அறையில் இருந்த

பொருட்களை சேதம் செய்து அங்கிருந்த நகை பணத்தையும் திருடியு ள்ளனர் கொள்ளையர்கள் கொள்ளையடித்துவிட்டு பின்பக்க வழியாக தப்பித்துச் சென்றுள்ளனர் முன் பக்க வழியாக கதவை உடைத்து உள்ளே சென்ற கொள்ளையர்கள் பின் பக்க வழியாக சென்றுள்ளனர்.

காலையில் கதவு திறந்திருப்பது கண்டு அருகில் உள்ள பொதுமக்கள் அளித்த தகவலின் அடிப்படையில் மகள் வீட்டில் இருந்த பழனி உடனடியாக பள்ளிப்பட்டு போலீசாருக்கு தகவல் அளித்தார் பள்ளிப்பட்டு போலீசார் திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து கைரேகை நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய் போன்றவற்றை வரவழைத்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் தனிப்படை போலீசாரும் இந்த சம்பவம் குறித்து இந்த பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராவை வைத்து விசாரணையில் இறங்கியுள்ளனர் அருகில் ஆந்திர மாநிலம் உள்ளதால் திருடர்கள் ஆந்திர மாநிலத்தை சேர்ந்தவர்களா அல்லது இந்த பகுதி உள்ளூர் திருடர்களா என்று கைரேகையை வைத்து தீவிர விசாரணையில் போலீசார் ஈடுபட்டுள்ளனர்.

பள்ளிப்பட்டு பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் ஆந்திர மாநில ஒட்டிய பகுதி என்பதால் இங்கு தீவிர கண்காணிப்பு செய்ய போலீசார் பற்றாக்குறை இருப்பதால் இரவு நேரத்தில் போலீசார் ரோந்து பணியில் ஈடுபடுவதில்லை இதனால் திருட்டு சம்பவங்கள் இருசக்கர வாகனங்கள் திருட்டு சம்பவங்கள் அதிகரித்து வருவதாக இந்த பகுதி மக்கள் அதிர்ச்சியுடன் குற்றச்சாட்டு முன் வைத்துள்ளனர்.

7 வயது சிறுமியை கற்பழித்து

5 வயது தங்கையை கொலை செய்த காம கொடூரனுக்கு தூக்குத் தண்டனை!

உத்தரப்பிரதேச சிறப்பு நீதி மன்றம் தீர்ப்பு!!

மீரட், நவ.02 7 வயது சிறுமியை கற்பழித்து அவரது 5 வயது தங்கையை கொலை செய்த காம கொடூரனுக்குதூக்குத்தண்டனை வழங்கி உத்தரபிரதேச சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

உத்தரபிரதேச மாநிலம் ஷாஜகான்பூர் பகுதியை சேர்ந்த7வயதுசிறுமியும், அவரது 5 வயது தங்கையும் பக்கத்து கிராமத்தில் உள்ள தொடக்க பள்ளிக்கு கல்வி பயில சென்றனர். அப்போது அதே பகுதியை சேர்ந்த அனில் என்கிற சாமோலி என்ற வாலிபர் சிறுமிகள் இருவரையும் வழி மறித்தார்.

பின்னர் அவர்களுக்கு பிஸ்கட் மற்றும் தேன் வழங்கினார். அவர்களிடம் நைசாக பேசி கிராமத்திலிருந்து தொலைவில்உள்ளஒரு வயலுக்கு அழைத்துச் சென்றார். அங்கு 7 வயது சிறுமியை கற்பழித்தார்.

அப்போது அதை தடுக்க முயன்ற அவரது 5 வயது தங்கையை கூர்மையான இரும்பு கம்பியால் தலையில் அடித்து படுகொலை செய்தார்.

இதற்கிடையே நீண்ட நேரமாகியும் 2 சிறுமிகளும் வீடு திரும்பாததால் அவர்களது குடும்பத்தினரும் கிராம மக்களும் சேர்ந்து பல இடங்களில் அவர்களை தேடினார்கள். இந்நிலையில் 5 வயது தங்கையின் உடல் கிராமத்திற்கு வெளியே கண்டெடுக்கப்பட்டது. அதே நேரத்தில் 7 வயது சிறுமி கடுகு வயலில் மயங்கி கிடந்தார். இச்சம்பவம் கடந்த 2021–ஆம் ஆண்டு பிப்ரவரி 23–ஆம் தேதி நடைபெற்றது.

இச்சம்பவம் குறித்து போலீசார் வழக்குப் பதிவு செய்து காம கொடூரன் அனில் என்கிற சாமோலியை கைது செய்தனர். இவர் மீது உத்தரபிரதேச மாநில சிறப்பு நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை நீதிபதி ரஜ்னீஷ் குமார் மிஸ்ரா விசாரித்தார். விசாரணை முடிவில் அனில் என்கிற சாமோலிக்கு தூக்குத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

மேலும் ரூ.1.37 லட்சம் அபாரதமும் விதித்தார். குற்றவாளியை சாகும் வரை தூக்கில் தொங்க விட வேண்டும் உத்தரவிட்டார்.

கரூர் நெரிசல் விவகாரம்:

3– டி லேசர் ஸ்கேனர் மூலம் சி.பி.ஐ. அதிகாரிகள் ஆய்வு!

கரூர்,நவ.2– தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த நிகழ்வு தொடர்பாக கரூரில் சிபிஐ அதிகாரிகள் 2வது நாளாக நேற்று ஆய்வு மேற்கொண்டனர்.

கரூர் வேலுசாமிபுரத்தில் தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக சிபிஐ அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

மேலும், இது தொடர்பாக மாநிலப் பொதுச் செயலாளர் ஆனந்த் உள்ளிட்ட தவெக நிர்வாகிகள் மீது சிபிஐ அதிகாரிகள் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில், வேலுசாமிபுரத்தில் 41 பேர் உயிரிழந்த இடத்தை சிபிஐ எஸ்.பி. பிரவீண்குமார், ஏஎஸ்பி முகேஷ் குமார் உள்ளிட்ட 12 பேர்கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் ஆய்வு செய்தனர். மேலும், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளிடமும் விசாரணை நடத்தினர்.

தொடர்ந்து, 2வது நாளாக நேற்று காலை வேலுசாமிபுரத்தில் சிபிஐஅதிகாரிகள்ஆய்வு மேற்கொண்டனர்.

கரூர் கோவை சாலையில், ஈரோடு சாலை பிரியும் இடத்தில் வாகனங்கள் செல்ல முடியாத வகையில் கயிறு கட்டியும், வாகனங்களை நிறுத்தியும் போலீஸார் தடுப்பு ஏற்படுத்தியிருந்தனர். பின்னர், நெரிசல் ஏற்பட்ட இடம் மற்றும் அருகேயுள்ள இடங்களை நவீன 3டி லேசர் ஸ்கேனர் கருவி மூலம் சிபிஐ அதிகாரிகள் 6 மணி நேரம் அளவீடு செய்தனர்.

அப்போது, கரூர் டிஎஸ்பி செல்வராஜ், ஆய்வாளர் மணிவண்ணன் தலைமையிலான போலீஸார் உடனிருந்தனர். அப்பகுதியில் அவ்வப்போது போக்குவரத்து தடை செய்யப்பட்டதால், அப்பகுதியைச்சேர்ந்தகுடியிருப்புவாசிகள்

"தினமும் இப்படி போக்குவரத்தை தடை செய்தால், நாங்கள் எப்படி வேலைக்குச் செல்வது?" என்று கூறி போலீஸாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

உ.பி.கோயிலுக்கு

சமாஜ்வாதி எம்.பி. இக்ரா ஹசன் ரூ.10 லட்சம் அறிவிப்பு!

லக்னோ,நவ.2– சமாஜ்வாதி எம்.பி. உத்தரப்பிரதேச கோயிலுக்கு ரூ.10 லட்சம் அளிப்பதாக அறிவித்துள்ளார்.

மேற்கு உ.பி.யின் ஷாம்லி மாவட்டம், கைரானா தொகுதி சமாஜ்வாதி கட்சியின் எம்.பி. இக்ரா ஹசன். இவரது தொகுதியில் பாபா சமந்தாஸ் என்ற பிரபல கோயில் உள்ளது.

கியான் பிக்ஷு மகாராஜ் என்பவரது நினைவாக இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. இங்கு கியான் பிக்ஷு மஹராஜின் 173–வது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கலந்து கொண்ட முஸ்லிம் எம்.பி.யான இக்ரா ஹசன், தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கோயில் வளர்ச்சிப் பணிக்கு ரூ.10 லட்சம் ஒதுக்குவதாக அறிவித்தார்.

விழாவில் அவர் பேசுகையில், "பொது நலத் திட்டங்களில் பாஜக அரசு சாதிப் பாகுபாடு காட்டுகிறது. பொது நலப் பணிகளுக்கு தற்போதைய அரசு தடைகளை ஏற்படுத்துகிறது. பொது சேவையை விட சாதி சமன்பாடுகளுக்கு அரசு முன்னுரிமை அளிக்கிறது. பின் தங்கிய சமூகத்தினருக்கு தீங்கு விளைவிக்கிறது" என்றார்.

நாடாளுமன்ற விதிகளின்படி, எம்.பி. ஒருவர் தனது தொகுதி மேம்பாட்டு நிதியை மதம் சார்ந்த பணிகளுக்கு அளிக்க முடியாது. இதனால் இக்ராவின் இந்த அறிவிப்பு சர்ச்சைக்குள்ளாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒருவேளை இதை பாஜக எம்.பி.க்கள் விமர்சித்தால் அதில் அரசியல் லாபம் தேடவே இக்ரா ஹசன் அறிவித்திருப்பதாக கருதப்படுகிறது.

இக்ராவின் சகோதரர் நஹீத் ஹசனும் 3 முறை சமாஜ்வாதி எம்.பி.யாக இருந்தார்.

இவர் சிறையில் இருந்ததால் இக்ரா முதல்முறையாக தேர்தலில் போட்டியிட்டு எம்.பி.யானார்.

மண்டைக்காடு நடுவூர்கரை சிவசக்தி கோயிலில் உற்சவ மூர்த்தி பிரதிஷ்டை மூன்று நாட்கள் நடைபெறுகிறது. விழாவில் விநாயகர் கோவிலில் பூஜை செய்து உற்சவமூர்த்தி சிலைகள் பகவதி அம்மன் கோவிலில் சிறப்பு பூஜை செய்யப்பட்டது. இதில் குமரி மாவட்ட முன்னாள் அறங்காவலர் குழு தலைவர் பிரபாஜி ராமகிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை கிரிவலத்துக்கு சிறப்பு ரெயில் இயக்கம்!

சென்னை, நவ.02: திருவண்ணாமலையில் நடைபெறும் பவுர்ணமி கிரிவலத்தை முன்னிட்டு, நவ.4 ஆம் தேதி விழுப்புரத்தில் இருந்து முன்பதிவில்லாத சிறப்பு ரெயில் இயக்கப்படவுள்ளதாக தெற்கு ரெயில்வே அறிவித்துள்ளது.

இதுகுறித்து தெற்கு ரெயில்வே வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு:

திருவண்ணாமலையில் நடைபெறவுள்ள பவுர்ணமி கிரிவலத்தை முன்னிட்டு, கூட்ட நெரிசலைத் தவிர்க்கும் வகையில் வரும் 4ஆம் தேதி காலை 10.10 மணிக்கு முன்பதிவில்லாத சிறப்பு மெமு ரெயில் (எண்: 06130) விழுப்புரத்தில் இருந்து இயக்கப்படும். இந்த ரெயில் அன்று பிற்பகல் 11.45 மணிக்கு திருவண்ணாமலையைச் சென்றடையும்.

மறு மார்க்கத்தில் திருவண்ணாமலையில் இருந்து செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.40 மணிக்குப் புறப்படும் முன்பதிவில்லாத சிறப்பு மெமு ரெயில் (எண்: 06129) பிற்பகல் 2.15 மணிக்கு விழுப்புரத்தை வந்தடையும்.

சிறப்பு ரெயில்கள் வெங்கடேசபுரம், மாம்பழப்பட்டு, அய்யாண்டூர், திருக்கோவிலூர், ஆதிச்சனூர், அண்டம்பள்ளம், தண்டரை ஆகிய நிலையங்களில் நின்று செல்லும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

VTM விமிடெட்
பதிவு அலுவலகம்: சூலக்கரை, விருதுநகர்.
CIN : L17111TN1946PLC003270
இணையதளம் : www.vtmill.com தொலைபேசி : 0452-2482595

அறிவிப்பு

செபி (SEBI) நிபந்தனைகள் 2015ம் (பட்டியலிடும் தேவைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்) நிபந்தனைகள் 29 மற்றும் 47 க்கு இணங்க இக்கம்பெனியின் இயக்குநர்கள் கூட்டம் 10.11.2025 திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு காணொளி வாயிலாக நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இந்தக் கூட்டம் செப்டம்பர் 30, 2025 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான நிறுவனத்தின் தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளை (Ind-As-ன் கீழ்) பரிசீலித்து பதிவு செய்யவும், வாரியக் கூட்டத்தின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை பரிசீலித்து அங்கீகரிப்பதற்காகக் கூட்டப்படுகிறது. இந்த அறிவிப்பு, பங்கு வர்த்தக நிறுவனத்தின் இணையதளம் www.bseindia.com இல் உள்ளது.

இடம்: சூலக்கரை, விருதுநகர்.
நாள்: 31.10.2025
VTM விமிடெட்டிற்காக,
கா.பிரியதர்ஷினி
கம்பெனி செயலாளர்